# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.236/2020 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 02 ( PW- 02 ) |
| பெயர் | :- | குழந்தைவேல் |
| தேதி | :- | 16-09-2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

நான் DME படித்துள்ளேன். நான் அரிசி வியாபாரம் செய்கிறேன். எனக்கு சொந்த ஊர் கோயம்புத்தூர். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி தாக்கல்செய்துள்ள வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். சுமார் 15 நாட்களுக்குமுன் படித்துப் பார்த்தேன். இந்த வழக்கு யார்மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வெங்கடேசன்மீது. சான்றாளர் பின்னிட்டு விஜயலட்சுமிமீது என்று சொல்கிறார். விஜயலட்சுமி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று நான் படித்துப் பார்க்கவில்லை.

நான் இதுவரை எத்தனை ஆவணங்களில் சான்றொப்பம் இட்டுள்ளேன் என்றால் ஒன்றில்கூட சான்றொப்பம் இடவில்லை. முதல்விசாரணை ஆணையுறுதி பத்திரம் தயாரிப்பதற்கு விவரம் சொன்னது யார் என்றால் நான்தான். யாரிடம் சொன்னேன் என்றால் வழக்குரைஞரிடம் சொன்னேன். எந்த வழக்குரைஞர் என்றால் என்னுடைய வழக்குரைஞர் என்று முதலில் சொன்ன சான்றாளர் பின்னிட்டு வாதியின் வழக்குரைஞர்

என்று சொல்கிறார். அப்போது என்னுடன் யார் இருந்தது என்றால் வேறு யாருமில்லை.

முதல்விசாரணைக்கான ஆவணங்களை நான் எதன் அடிப்படையில் சொன்னேன் என்றால் விருப்பாவணத்தை படித்து இருந்தேன். அதை வைத்து சொன்னேன். விருப்பாவணத்தை நான் எப்போது படித்தேன் என்றால் ஒரு வாரத்திற்குமுன் படித்தேன். அதை என்னிடம் யார் கொடுத்தது என்றால் வாதி மலர்விழி. விருப்பாவணத்தில் உள்ள சொத்துப் பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

விருப்பாவணம் எந்த தேதியில் எங்கு தயாரிக்கப்பட்டது என்றால் 05.03.2004-ஆம் தேதியன்று மலர்விழி வீட்டில் வைத்து நிறைவேற்றப் -பட்டது. விருப்பாவணம் எழுதுவதற்கு யார் விவரம் சொன்னது என்று எனக்கு தெரியாது. அது எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. விருப்பாவணம் எந்த தாளில் தயாரிக்கப்பட்டது என்றால் ஆவணங்கள் எழுதும் முத்திரை தாளில் தயாரிக்கப்பட்டது. முத்திரை தாளை மலர்விழியும் ராக்கியப்பனும் வாங்கி வைத்திருந்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. ஆனால் முத்திரை தாளில் அவர்கள் பெயர் இருந்தன. நான் கையொப்பம் இட்டபோது வேறு ஏதாவது ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் இட்ட விருப்பாவணத்தில் வேறு ஏதாவது பத்திரங்களை பற்றி குறிப்பு இருந்ததா என்றால் இல்லை. நான் மொத்தம் எத்தனை கையொப்பம் இட்டேன் என்றால் பக்கத்திற்கு ஒன்று வீதம் 03 போட்டேன். என்பெயரில் நான் சொத்துக்கள் எதையும் தனியாக கிரையம் வாங்கிருக்கேனா என்றால் இல்லை. வேறு ஏதாவது பத்திரங்கள் படித்துப் பார்த்துகிறேனா என்றால் எனக்கு நினைவில்லை.

மற்றொரு சான்றொப்பம் இட்டது யார் என்றால் கிருஷ்ணசாமி என்பவர். அவர் 03 கையொப்பம் போட்டாரா என்றால் ஆமாம். கடைசி பக்கத்தில் முதல் சான்றொப்பம் இட்டது நான்தான். அதை தொடர்ந்து விலாசம் எழுதியதும் நான்தான். சாதாரணமாக முதலில் என் பெயர் பிறகு தந்தை பெயர் அதன்பிறகு விலாசம் எழுதுவேன். விருப்பாவணத்தின் கடைசி பக்கத்தில் என்பெயருக்கு மேலே விலாசம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை.

நான் கையொப்பம் இட்டு பெயர் விவரங்களை எழுதியபிறகுதான் கிருஷ்ணசாமி கையொப்பம் இட்டார். கிருஷ்ணசாமி கடைசி பக்கத்தில் கையொப்பம் இட்டார் என்றால் இரண்டு. முதல் கையொப்பம் இட்டபோது பெயர் எழுதாமல் விட்டுவிட்டார். இரண்டாவது கையொப்பம் போட்டுவிட்டு அதற்கு அடையாளமாக பெயர் எழுதினார். அவரும் மலர்விழி வீட்டில் வைத்துதான் கையொப்பம் போட்டார் என்றால் சரிதான். கிருஷ்ணசாமி வாதியின் கணவர் ராக்கியப்பனின் சகோதரியின் கணவர் என்றால் அவர்களுக்கு உறவினர் என்பதுமட்டும் தெரியும்.

வெங்கடேசனுக்கு 01-ஆம் பிரதிவாதி விஜயலட்சுமி மட்டும் ஒரே மகள் என்றால் சரிதான். வெங்கடேசனுக்கு மகள் இருக்கும் நிலையில் வாதிக்கு விருப்பாவணம் எழுதி வைக்க வேண்டிய அவசியம் வெங்கடேசனுக்கு இல்லை என்றால் சரியல்ல. வெங்கடேசன் எப்போது இறந்தார் என்றால் 2017-ஆம் ஆண்டு. வெங்கடேசனின் மனைவி தற்போது உயிரோடு இல்லை.

வெங்கடேசனும் அவருடைய மனைவியும் இறந்துவிட்ட நிலையில் 01-ஆம் பிரதிவாதிக்கு சொந்தமாக சொத்தை அபகரிப்பதற்காக வாதி

மலர்விழி, அவருடைய கணவர் ராக்கியப்பன் ஆகியோர் எங்கள் உதவியுடன் பொய்யான விருப்பாவணத்தை புனைந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் அந்த ஆவணத்தை யார் தயாரித்தது என்று விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வெங்கடேசன் என் வீட்டிற்கு வந்ததாகவும் விருப்பாவணம் எழுதி வைக்கவேண்டும் என்றும் அதற்கு சான்றொப்பம் இடவேண்டும் என்றும் என்னை அழைத்தாகவும் நான் சொல்லியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல. 05.03.2004-ஆம் தேதியன்று வெங்கடேசன் கோயம்புத்தூருக்கு வரவில்லை என்றும் வழக்கு விருப்பாவணத்தை நிறைவேற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி மலர்விழி எனக்கும் என் மனைவிக்கும் நெருங்கிய நண்பர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்முன்னிலையில் வெங்கடேசன் விருப்பாவணத்தில் கையொப்பம் இட்டார் என்றும் நாங்கள் கையொப்பம் இட்டதை அவர் பார்த்தார் என்றும் நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.